# ‘ஈசி டிரைவ்’ செயலி மூலம் ஆர்டர் செய்தால் ‘டாக்சி’ வீடு தேடி வரும்; உங்கள் காரை ஓட்ட டிரைவரும் வருவார்

## நிறுவனர் ராம்பிரசாத் தகவல்

சென்னை, ஜூன் 20–

ஈசி டிரைவ் நிறுவனம் சென்னை, பெங்களூரில் சொந்த கார் வைத்திருப்பவர்களுக்கு, நம்பகமான, திறமையான கால் டிரைவர்களை போன் செய்தால் அனுப்பும் வசதியை 9 ஆண்டுகளாக வழங்கி வருகிறது. இது புதியதாக சென்னை, பெங்களூர் நகரங்களில் போன் செய்தால் டாக்சி வீடு தேடி வர ஏற்பாடு செய்துள்ளது. உங்கள் கார்களை ஓட்ட கால் டிரைவர் வேண்டுமானாலும் அனுப்பப்படும் என்று இதன் நிறுவனர் தலைமை நிர்வாகி ராம் பிரசாத் தெரிவித்தார்.

இதற்காக ஈசி ட்ரைவ் எனப்படும் ஒரு மொபைல் செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் ஓட்டுநர், அதோடு கூட டாக்சி ஆகிய இருவரையும் தனித்தனியே வாடகைக்கு அமர்த்தும் வசதியுடன் கூடிய இந்த செயலி நகரத்துக்குட்பட்ட பயணங்களுக்கு ஒரு சிறந்த தளமாக உள்ளது. இத்தொழிலில் 9 ஆண்டுகள் அனுபவத்துடன் இந்நிறுவனம் 100000 வாடிக்கையாளர்களுடனும் 800+ ஓட்டுநர்கள் மற்றும் 100 முழு நேர டேக்ஸி ஓட்டுநர்களுடனும் சிறப்பான சேவைகளை வழங்கி வரும் நிறுவனம் என்கிற வகையில் தனக்கென ஒரு தனியிடத்தை தக்கவைத்துள்ளது.

ஓட்டுநரை வாடகைக்கு அமர்த்தும் சேவையில் ஒரு முன்னோடியாகவும் வழிகாட்டியாகவும் இருந்து ஈசி ட்ரைவ் உள்ளூர் மற்றும் வெளியூர், அலுவலக பிக்அப் மற்றும் ட்ராப், வாலட் பார்க்கிங் மற்றும் நிரந்தர ஓட்டுநர்களை அமர்த்துதல் உள்ளான ஓட்டுநர் வாடகை அமர்த்தும் சந்தையின் அனைத்து பிரிவிலும் தனது சேவையை நல்கி வருகிறது என்றார் ராம்பிரசாத். ஓட்டுநர்களின் பின்புலத்தை தீர விசாரித்தும் மற்றும் ஓட்டுநர்கள் ஆட்சேர்ப்பின் போது சிபாரிசு கடிதம்/காவல்துறை சான்றிதழ், உரிய இடைவேளையில் நடத்தப்படும் உள்பயிற்சி மற்றும் அனுபவமுள்ள ஓட்டுநர்களை மட்டுமே வேலைக்கு எடுத்தல் போன்றவை உள்ளான விலாவரியான ஆவண செயல்முறைகளையும் கைக்கொள்வதன் மூலம் பயணிகளின் பாதுகாப்புக்கு தேவையான அனைத்து முன்னேற்பாடுகளையும் நாங்கள் செய்கிறோம்” என்றும் ராம் பிரசாத் தெரிவித்தார்.

ஒரு பயணம் / சவாரியின் இறுதியில் ஓட்டுநரை மதிப்பிடவும் மற்றும் தங்கள் கருத்துக்களை பகிரவும் ஈஸி ட்ரைவ் வாடிக்கையாளர்களை அனுமதிக்கிறது. ஈஸி ட்ரைவ் நிர்ணயித்துள்ள தரநிலைக்கு கீழாக ஒரு ஓட்டுநரின் மதிப்பீடு குறையும் போது, அந்த ஓட்டுநர் தன்னுடைய சேவையிலிருந்து விடுவிக்கப்படுவார்/ நீக்கப்படுவார். இது ஓட்டுநர்கள் தங்களது சேவையில் உயர் தரத்தை வழங்கவும், மேலும் அதை தொடர்ந்து பராமரிக்கவும் அவர்களை ஊக்குவிக்கிறது என்றார் அவர்.

## சென்னையில் 25–ந்தேதி ஐடிஎப் சீனியர்ஸ் டென்னிஸ் போட்டி துவக்கம்

